# பெரும்பான்மையை நிரூபித்தது தவெக அரசு

## அதிமுகவில் பிளவு; திமுக வெளிநடப்பு



தமிழக சட்டப்பேரவையில் புதன்கிழமை நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற பிறகு, நன்றி தெரிவித்து பேசிய முதல்வர் விஜய்.

| ஆதரவு | எதிர்ப்பு | நடுநிலை |
|---|---|---|
| 144 | 22 | 5 |

**சென்னை, மே 13:** தமிழக சட்டப்பேரவையில் புதன்கிழமை நடைபெற்ற நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் தவெக அரசு வெற்றி பெற்றது. 144 உறுப்பினர்களின் ஆதரவுடன் அரசுக்கான பெரும்பான்மையை நிரூபித்தது.

தீர்மானத்துக்கு ஆதரவாக அதிமுக அதிருப்தி பிரிவு எம்எல்ஏக்கள் 25 பேர் எஸ்.பி. வேலுமணி தலைமையில் வாக்களித்ததால், தவெக அரசு எளிதில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்தது. வாக்கெடுப்பில் பங்கேற்காமல் திமுக எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றது. தனிப் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க 118 உறுப்பினர்களின் தேவை. ஆகையால், திமுக கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவை தவெக பெற்றது. மொத்தம் 120 எம்எல்ஏக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க தவெக தலைவர் விஜய் உரிமை கோரினார்.

அதைத் தொடர்ந்து, விஜய் முதல்வராகவும், 9 பேர் அமைச்சர்களாகவும் கடந்த மே 10-ஆம் தேதி பதவியேற்றனர். தவெக அரசு மே 13-ஆம் தேதிக்குள் சட்டப்பேரவையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் கெடு விதித்தார்.

**நம்பிக்கை தீர்மானம்:** அதன்படி, பெரும்பான்மையை நிரூபிக்க புதன்கிழமை பேரவை கூடியது. பேரவை தொடங்கியதும் தவெக அரசு மீதான நம்பிக்கை கோரும் தீர்மானத்தை முதல்வர் விஜய் முன்மொழிந்தார்.

தீர்மானத்துக்கு ஆதரவாக காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள், முஸ்லிம் லீக் மற்றும் அமமுகவில் இருந்து நீக்கப்பட்ட எம்எல்ஏ காமராஜ், அதிமுக அதிருப்தி பிரிவு எம்எல்ஏ எஸ்.பி. வேலுமணி ஆகியோர் பேசினர்.

அவருக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, எடப்பாடி தரப்பு எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர். ஆனால், அவர் அதிமுக எம்எல்ஏ என்பதால் பேச வாய்ப்பு அளித்ததாக பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்தார்.

தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா விஜயகாந்த் தவெக அரசை கடுமையாக விமர்சித்துப் பேசிவிட்டு வெளிநடப்பு செய்தார்.

பாமக எம்எல்ஏ சௌமியா அன்புமணி, பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்றும், ஒரு மதுக்கடையை மூடினால் 4 தெருக்களில் மதுக்கடைகள் திறக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டு வாக்கெடுப்பில் இருந்து விலகி இருப்பதாகக் கூறி நடுநிலை வகித்தார்.

**எதிர்ப்பு...:** நம்பிக்கை கோரும் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து எடப்பாடி கே.பழனிசாமி பேசினார். திமுக கூட்டணியில் உள்ள மனிதநேய மக்கள் கட்சி எம்எல்ஏ எம்.எச். ஜவாஹிருல்லா, மனிதநேய ஜனநாயக கட்சி எம்எல்ஏ தமிமுன் அன்சாரி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி எம்எல்ஏ நித்தியானந்தன் ஆகியோர் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மதிமுக உறுப்பினர்கள் 2 பேர் பேரவைக்கு வரவில்லை.

இறுதியில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், 'தவெகவை 65 சதவீத மக்கள் நிராகரித்துள்ளனர். கட்சித் தலைவருக்கே தெரியாமல் எம்எல்ஏக்களை கொண்டுவந்து ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்க வைத்துள்ளனர். நம்பிக்கை வாக்கெடுப்பு முறையில் மக்கள் நம்பிக்கையை தவெக இழந்துள்ளது. ஆட்சியைத் தொடர தடையாக இருக்க விரும்பில்லை' என்று கூறிவிட்டு திமுக எம்எல்ஏக்கள் 57 பேருடன் வெளிநடப்பு செய்தார்.

**வாக்கெடுப்பு:** இதையடுத்து, நம்பிக்கை வாக்கெடுப்பு நடைமுறை தொடங்குவதாக பேரவைத் தலைவர் அறிவித்தார். உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணிக்கும் நடைமுறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அவைக்கு வெளியில் சென்ற உறுப்பினர்களை அவைக்கு அழைக்கும்வகையில் மூன்று முறை மணி ஒலிக்கப்பட்டது. பின்னர், பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பட்டதும் வாக்கெடுப்பு தொடங்கியது.

திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை முதல்வர் விஜய் ராஜிநாமா செய்திருந்தாலும், திருப்பத்தூர் தொகுதியில் ஒரு வாக்கில் வெற்றி பெற்ற தவெக வேட்பாளர் தொடர்பான வழக்கு நிலுவையில் இருப்பதால் வாக்களிக்க அனுமதி கிடைக்காததாலும் தவெகவின் பலம் 106-ஆக குறைந்தது.

வாக்கெடுப்பின்போது அவையில் 171 எம்எல்ஏக்கள் இருந்தனர். முதலில் ஆளும் கட்சி எம்எல்ஏக்கள் தரப்பில் பகுதிவாரியாக முதலில் ஆதரவு, அடுத்ததாக எதிர்ப்பு, பின்னர் நடுநிலை தெரிவிக்கும் எம்எல்ஏக்கள் எழுந்து நிற்க பேரவைத் தலைவர் அறிவுறுத்தினார். அவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டதும் தங்கள் இருக்கையில் அமர்ந்தனர். ஆளும் தரப்பில் முழுவதும் ஆதரவு எம்எல்ஏக்கள் இருந்தனர்.

எதிர்தரப்பு பகுதியில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் 22 எம்எல்ஏக்கள் நம்பிக்கை தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தனர். எஸ்.பி.வேலுமணி தரப்பு ஆதரவு எம்எல்ஏக்கள் 25 பேர் ஆதரவாக வாக்களித்தனர். பாமகவின் நான்கு எம்எல்ஏக்களும், பாஜக எம்எல்ஏவும் நடுநிலை வகித்தனர்.

காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (2), விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகளின் எம்எல்ஏக்கள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதையடுத்து, 144 எம்எல்ஏக்கள் ஆதரவுடன் விஜய் தலைமையிலான தவெக அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதாக பேரவைத் தலைவர் அறிவித்தார். பின்னர், பேரவையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாக பேரவைத் தலைவர் தெரிவித்தார்.

பேரவையில் இருந்த தவெக எம்எல்ஏக்கள், அரசுக்கு ஆதரவளித்த அதிமுக எம்எல்ஏக்கள் முதல்வர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

முதல்முறையாக வாக்கெடுப்பு நிகழ்வுகள் நேரலையாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

# தங்கம், வெள்ளி மீதான இறக்குமதி வரி 15%-ஆக அதிகரிப்பு

**புது தில்லி, மே 13:** தங்கம், வெள்ளி மீதான இறக்குமதி வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்துவதாக மத்திய அரசு புதன்கிழமை அறிவித்தது. இருமடங்குக்கும் அதிகமான இந்த வரி உயர்வு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் நிலவி வரும் போர்ச்சூழலால் அதிகரித்து வரும் இறக்குமதி செலவினத்தைக் கட்டுப்படுத்தவும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்கவும் இந்த அதிரடி நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. ஏற்கெனவே, நாட்டு மக்கள் தங்கம் வாங்குவதை ஓராண்டுக்கு நிறுத்த வேண்டும் என்பது உள்பட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கம், எரிபொருள், சில வகை சமையல் எண்ணெய்யை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்கிறது. போர்ச்சூழலில் இவற்றின் விலை கடுமையாக உயர்ந்து வருவதால் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பும் பாதிக்கப்படுகிறது.

**அதிகரிக்கும் இறக்குமதி:** தங்கம், வெள்ளி மட்டுமல்லாது, பிளாட்டினம் மீதான இறக்குமதி வரி 6.4 சதவீதத்திலிருந்து 15.4 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத தங்கம், வெள்ளிக் கட்டிகள், நாணயங்கள், நகை உதிரிபாகங்கள் உள்ளிட்டவற்றுக்கும் இந்த வரி உயர்வு பொருந்தும்.

## மத்திய அரசு அதிரடி நடவடிக்கை

2025-26 நிதியாண்டில் தங்கம், வெள்ளி இறக்குமதி வருடாந்திர அடிப்படையில் 26.7 சதவீதம் உயர்ந்து 102.5 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த இறக்குமதியில் இவற்றின் பங்கு 2024-25-ஆம் ஆண்டில் 11.8 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்ந்துள்ளது.

**தங்க நகை மோகம்:** சீனாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய தங்க நுகர்வு நாடாக இந்தியா திகழ்கிறது. இந்தியாவில் நகைகளாக தங்கம் அதிகம் வாங்கிக் குவிக்கப்படுவதால் அதன் இறக்குமதியும் அதிகமாக உள்ளது. இது அந்நியச் செலாவணி கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு செவ்வாய்க்கிழமை (மே 12) வரலாற்றிலேயே குறைந்த அளவான ரூ.95.75-ஆக சரிந்தது. தங்கம் மீதான இறக்குமதி வரி உயர்த்தப்பட்ட பிறகு புதன்கிழமை ரூபாய் மதிப்பு ஓரளவு மீண்டது.

இந்த 15 சதவீத வரியுடன் இறக்குமதியாளர்கள் 3 சதவீத சரக்கு-சேவை வரியும் (ஜிஎஸ்டி) செலுத்த வேண்டும். இதனால் தங்க இறக்குமதி மீதான மொத்த வரி 9.18 சதவீதத்திலிருந்து 18.45 சதவீதமாக உயர்ந்துள்ளது.

**விலை உயரும்:** அகில இந்திய நவரத்தினங்கள் மற்றும் நகை கவுன்சில் (ஜிஜேசி) தலைவர் ராஜேஷ் ரோக்டே இது தொடர்பாக கூறுகையில், 'சுங்க வரி உயர்வு காரணமாக தங்கம் விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. மேலும், சட்டவிரோத தங்கக் கடத்தல் அதிகரித்து, நாட்டில் வேறு வகையான பொருளாதாரத் தாக்கம் உருவாகும்' என்றார்.

**விற்பனை குறையும்:** சென்கோ கோல்ட் அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனத்தின் தலைவர் சுவங்கர் சென் கூறுகையில், 'மேற்காசிய போர்ப் பதற்றம் தணியும் வரை இந்த சுங்க வரி தொடரலாம். ஓராண்டு வரை நீடிக்க வாய்ப்புள்ளது. தங்க விற்பனை அளவு 10-15 சதவீதம் குறையலாம். ஆனால், பண மதிப்பின் அடிப்படையில் விற்பனை உயர்வாகவே இருக்கும். மக்கள் குறைந்த எடையிலான நகைகளை வாங்கத் தொடங்குவார்கள்' என்றார்.

**மத்திய அரசு விளக்கம்:** இது தொடர்பாக அரசு வட்டாரங்கள் கூறுகையில், 'அசாதாரணமான சர்வதேச சூழல் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த சுங்க வரி உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்ற இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலாவணி நெருக்கடியைக் குறைக்கும் முயற்சி. இந்த நடவடிக்கை தங்கம் வாங்குவோருக்கு எதிரானதல்ல' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய போர், ஹோர்முஸ் நீரிணை முடக்கம் காரணமாக கச்சா எண்ணெய், உணவுப் பொருள்கள் மற்றும் உரங்களின் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளது. போர் தொடங்குவதற்கு முன் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை சுமார் 73 அமெரிக்க டாலராக இருந்தது. தற்போது அது 107 டாலராக உயர்ந்துள்ளது. கடந்த ஏப்ரல் 30-இல் 126 டாலர் என்ற 4 ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை எட்டியது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையின் 87 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. அதில் 46 சதவீதம் ஹோர்முஸ் நீரிணை வழியாக வருகிறது. இந்தியாவின் எல்பிஜி தேவையின் 60 சதவீதமும் இறக்குமதி செய்யப்படுகிறது. அதில் 90 சதவீதத்துக்கு மேல் வளைகுடா நாடுகளிலிருந்து வருகிறது.

# ரூ.9.35 கோடியில் விரிவாக்கப்பட்ட அடையாறு சமுதாய நகர் நல மையம்

## விரைவில் திறப்பு

சென்னை, மே 13: அடையாறு பகுதியில் ரூ.9.35 கோடியில் விரிவாக்கப்பட்டுள்ள சமுதாய நகர் நல மையம் விரைவில் திறக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மாநகராட்சி சார்பில் 19 சமுதாய நகர் நல மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்காக மாநகராட்சியின் சார்பில் நகர் மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். நகர் நல மையங்களில் மகளிர், குழந்தைகளுக்கான சிகிச்சைக்கள் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு நகர் நல மையத்திலும் மாதம் தலா 50 முதல் 60 பிரசவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

நகர் நலமையங்களில் அடையாறு மண்டலத்தில் உள்ள வெங்கடரத்னா சாலையில் பிளஸ்என்எல் மையம் அருகே உள்ள சமுதாய நகர் நல மையத்தில் 30 படுக்கை வசதிகளுடன் மகளிருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், அங்கு தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் வந்து சென்றனர். இதையடுத்து அந்த மையத்தை விரிவாக்கி சிகிச்சையை மேம்படுத்தக் கோரிக்கை எழுந்தது.



சென்னை மாநகராட்சி சார்பில் அடையாறு பகுதியில்
70 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையம்.

அதையடுத்து சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.9.35 கோடியில் அடையாறு சமுதாய நகர் நல மையத்தை விரிவாக்க கூடுதல் கட்டடம் கட்ட கடந்த 2025-ஆம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டன. தற்போது அப்பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

அங்கு தற்போது 70 படுக்கைகளுடன் சிகிச்சைப் பிரிவு கட்டப்பட்டுள்ளது. அதில் கர்ப்பிணிகளுக்கான பரிசோதனை சிகிச்சைகள், அனைத்து வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பிரசவத்துக்கான அறுவைச் சிகிச்சை அரங்குகள், குழந்தைகளுக்கான தடுப்பூசி சிகிச்சை பிரிவுகள் என நவீன சிகிச்சை வசதிகள் 24 மணி நேரமும் அளிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுதாய நகர் நல மையம் விரைவில் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளதாக மாநகராட்சி சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் சிக்கனம்

# பாதுகாப்பு வாகனங்களைக் குறைத்தார் பிரதமர் மோடி

**புது தில்லி, மே 13:** எரிபொருள் சிக்கன நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தனது பாதுகாப்பு அணிவகுப்பு வாகனங்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.

மேற்காசிய நெருக்கடியின் பின்னணியில், உலகளாவிய எரிபொருள் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால், பெட்ரோல்–டீசல்–எரிவாயு போன்ற பெட்ரோலியப் பொருள்களை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி அண்மையில் வேண்டுகோள் விடுத்தார்.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாஜக கூட்டத்தில் பேசிய அவர், 'பெட்ரோல், டீசல், எரிவாயு போன்ற பெட்ரோலியப் பொருள்களை அதிகபட்ச சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்; பெரும்பாலும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும். அந்நியச் செலாவணியை சேமிக்க உதவும் வகையில், திருமணத்துக்குத் தங்கம் வாங்குவதையும், வெளிநாட்டுப் பயணங்களையும் ஓராண்டுக்கு ஒத்திவைக்க வேண்டும். கரோனா காலகட்டத்தைப் போல வீட்டில் இருந்து பணிபுரிவது, இணைய வழியில் வகுப்புகளை நடத்துவது போன்ற நடைமுறைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்' என்றார்.

**பாதுகாப்பு வாகனங்கள் குறைப்பு:** ஹைதராபாதை தொடர்ந்து, குஜராத், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களுக்கு மேற்கொண்ட பயணங்களின்போது, பிரதமர் மோடி தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்துவிட்டதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

தில்லியில் புதன்கிழமை மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற நிலையில், அந்தக் கூட்டத்துக்கு இரண்டே வாகனங்களுடன் பிரதமர் மோடி பயணித்தார். இது தொடர்பான விடியோ சமூக ஊடகங்களில் வேகமாக பரவியது. மத்திய அமைச்சர்களும் பாதுகாப்பு வாகனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்களைக் குறைக்க வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

'சிறப்புப் பாதுகாப்புப் படை (எஸ்பிஜி) நடைமுறைகளின்கீழ் அத்தியாவசிய பாதுகாப்பு அம்சங்கள் பாதிக்கப்படாத வகையில், பிரதமர் தனது பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளார். இதேபோல், தனது பாதுகாப்பு வாகன அணிவகுப்பில் இயன்ற அளவில் மின்சார வாகனங்களை இணைக்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்' என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.


எரிபொருள் சிக்கனத்துக்கான பிரதமரின் கோரிக்கையைத் தொடர்ந்து, நாட்டில் பொது முடக்கம் அமல்படுத்தப்படலாம் அல்லது எரிபொருள் விநியோகத்துக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகின.

ஆனால், குடிமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலேயே பிரதமர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்; பொது முடக்கம் அல்லது கட்டுப்பாடுகளை அமலாக்கும் திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை என்று பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி திட்டவட்டமாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மீது கார்கே சாடல்

'மக்களுக்கு சிக்கனத்தைப் போதிக்கும் பிரதமர் மோடி, தனது சுய விளம்பரத்துக்கு பெரும் செலவு செய்கிறார்' என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சாடினார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், 'ஒரு புறம் முதியோர், கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார ரீதியிலான கண்ணியத்தைப் பறித்துக் கொண்டே, மற்றொருபுறம் சிக்கனம், தியாகம் குறித்து பாடமெடுக்கிறார் பிரதமர் மோடி. விலைவாசி உயர்வால் ஏழைகள் நசுக்கப்பட்டுள்ள நிலையில், முதியோர் ஓய்வூதியம் கடந்த 12 ஆண்டுகளாக ஒரு பைசாகூட உயர்த்தப்படவில்லை. அதேநேரம், கடந்த 2014–15 முதல் 2024–25 வரை பிரதமர் மோடியின் சுய விளம்பரத்துக்காக அரசுத் தரப்பில் ரூ.5,987.46 கோடி செலவிடப்பட்டுள்ளது' என்று விமர்சித்துள்ளார்.



உலக கால்நடை மருத்துவ தினம்

# செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி முகாம்

**சென்னை, மே 13:** சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செல்லப் பிராணிகளுக்கு இலவச வெறிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: உலக கால்நடை மருத்துவ தினத்தையொட்டி புதன்கிழமை செல்லப் பிராணிகளுக்கு இலவச வெறிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இதில், 75 நாய்கள் மற்றும் 22 பூனைகளுக்கு இலவச வெறிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்த முகாமை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை. துணை வேந்தரும் (பொ) பதிவாளருமான இர. நரேந்திர பாபு தொடங்கி வைத்தார்.




வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதன்கிழமை நடைபெற்ற செல்லப் பிராணிகளுக்கான இலவச தடுப்பூசி முகாம்.

பின்னர் அவர் பேசுகையில், செல்லப் பிராணிகளுக்கு உரிய நேரத்தில் தடுப்பூசிகள், குடற்புழு நீக்க மருந்துகளைக் கொடுத்து அவற்றின் உடல் நலத்தைப் பேணிக்காக்க வேண்டும். அவற்றுக்கு உடல்நிலை பாதிக்கும்போது, தெருவிலே விட்டுவிடக் கூடாது. கால்நடை மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை பெறுவது அவசியம் என்றார்.

இந்த முகாமில், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் ப.தேவேந்திரன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை. சிகிச்சையியல் இயக்குநர் ரி.அனில்குமார், பேராசிரியர்கள் கோ.விஜயகுமார், நா.ஜெயதிலகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.